**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 122 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 25.03.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**Rajendra Babu (PW 1)**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் இவ்வழக்கில் 2ஆம் வாதி என்றால் சரிதான். 1ஆம் வாதி உடல்நிலை சரியில்லாதக் காரணத்தால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முடியவில்லை. முதலாம் வாதிக்கு உடல்நிலை பாதிக்கபட்டு இருப்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதலாம் வாதி எனது உறவினரல்ல. 1ஆம் வாதி இந்த வழக்கை அவரது சார்பாக நடத்த எனக்கு அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அவ்வாறு 18 வருடங்களுக்கு முன்னதாக 1ஆம் வாதி பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த பொது அதிகாரப் பத்திரத்தின் அடிப்படையில் அசல் வழக்கு எண் 93/2010 என்ற வழக்கை இவ்வழக்கின் 1ஆம் வாதியான பிரதிவாதி சார்பாக நான்தான் நடத்தினேன் என்று சொன்னால் சரிதான். கடந்த 18 வருடங்களில் 1ஆம் வாதி அவர் வழக்கு தாக்கல் செய்தபோதும், அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோதும் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவரது கணவரான போஸ் என்பவர் ஆஜராகி சாட்சியமளித்திருக்கிறார். 1ஆம் வாதி உயிரோடு இருப்பதற்கு ஆதாரமாக நான் சான்றிதழ் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.